# 2.2 இந்த இரட்சிப்பு

**வேத வசனம்:** இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். மத்தேயு 1:23

**அறிக்கை:** கர்த்தராகிய இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தால் நான் இரட்சிக்கப்பட்டுள்ளேன்

**சத்தியம்:** தேவனுடைய குமாரன் இயேசு கிறிஸ்து உன்னதமான தன்னுடைய ஸ்தானத்தை விட்டு, பூமிக்கு இறங்கி வந்தார். அவரை விசுவாசிப்பவர்கள் யாவரும் பிதாவாகிய தேவனிடமிருந்து மன்னிப்பையும் இரட்சிப்பையும் பெற்றுக்கொள்ளும்படி சிலுவையில் மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.

## பாடக்குறிப்புகள்

- **தேவனின் சிறந்த அன்பு**
  *யோவான் 3:16*
- **வேறுபட்ட மாறுத்தரங்கள்**
  *லூக்கா 23:35,36*
- **பலிக்கான ஆட்டுக்குட்டி**
  *யோவா 1:29 ஏசாயா 53:4,5*
- **தேவனின் அன்பை நம்பு**
  *ரோமர் 5:8*
- **விசுவாசத்தால் கர்த்தரை ஏற்றுக்கொள்**
  *யோவான் 3:18, ரோமர் 10:9*

## அர்த்தமுள்ள வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *இயேசு கிறிஸ்துவின் மரணம் ஏன் நியாயமற்றதாக இருந்தது?*
- *ஒரு தியாகபலியின் அவசியம் என்ன?*

## வேதப்பகுதி

*லூக்கா 23:35-56*
*ஏசாயா 53:1-7*

## அழுக்கு நீங்கத் தீர்வு

கடந்த வகுப்பில் பார்த்த அழுக்குத் தண்ணீரை நினைவில் கொள்ளவும். அழுக்குத் தண்ணீரை கழுவி சுத்திகரிப்பதற்கான ஒரே வழி சுத்திகரிப்பான் மட்டுமே. நமது பாவமாகிய கறை நீங்க ஒரே வழி இயேசு என்னும் சுத்திகரிப்பான் மட்டுமே. அவரால் நம்மை கழுவி சுத்தம் பண்ண முடியும். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். அவரை விசுவாசியாதவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று என்று வேதம் சொல்லுகிறது. இயேசுவே ஆண்டவர் என்று உன் வாயினால் அறிக்கையிட்டு தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்தில் விசுவாசிப்பாயானால் நீ இரட்சிக்கப்படுவாய்.

## செயல்

நமக்கு இரக்கம் காட்ட இயேசு நியாயமற்ற தீர்ப்புக்குள்ளானார். உன் சொந்த வாழ்க்கையில் பிறருக்கு இரக்கம் செய்ய ஒரு வழியைக் கண்டுபிடி

## சிந்திக்க:

*தேவனுடைய ஈவாகிய இரட்சிப்புக்கு உன்னுடைய பதில் என்ன?*

______________________________

______________________________

## ஜெபம்:

*தேவனுடைய சிறந்த அன்பை இன்னும் அதிகமாய்ப் புரிந்துகொள்ளும்படியான ஜெபத்தை இந்த இடத்தில் எழுது.*

______________________________

______________________________